**IN THE COURT OF THE SUBORDINATE JUDGES COURT HOSUR**

**OS No. 247/2017**

Deposition of PW 2 witness for the Plaintiffs/Defendants.

Solemnly affirmed and sworn by Tr.M.Ramesh kumar Junior Assistant on 23.04.2022in accordance with the provisions of the Act of 1988.

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr.Venkatesappa | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

முதல் விசாரணை :

முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தயாரிக்கப்பட்டு உண்மை என்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளேன்.

குறுக்கு விசாரண

ரத்தினம்மா சொல்லி தான் நான் நீதிமன்றத்திற்கு வந்தேன்.ரத்தினம்மாமவின் கணவர் பெயர் பாப்பையா. எனது மகளை தான் இரண்டாம் வாதி திருமணம் செய்துள்ளார். வாதிகள் சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். குஜ்ஜம்மா, ரத்தினம்மா. பாப்பம்மா. சாவித்ரியம்மா ஆகியோர் மீது வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து திகடரப்பள்ளியில் உள்ளது. தாவா சொத்துக்கள் காமன் தொட்டி கிராமத்தில் இல்லை. தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்களின் விஸ்தீரணமும் எனக்குத் தெரியாது. தாவா சொத்து முதலில் முனியப்பாவிற்கு பாத்தியப்பட்டிருந்தது. அந்த சொத்து முனியப்பாவின் சுய சம்பாத்ய சொத்து. எந்த வருடம் அந்த சொத்தை முனியப்பா சம்பாதித்தார் என்று எனக்குத் தெரியாது.முனியப்பா தற்பொழுது உயிருடன் இல்லை. அவர் இறந்த தேதி எனக்குத் தெரியாது. அவ்ர் எவ்வளவு நாளுக்கு முன்பு இறந்தார் என்பதும் தெரியாது. முனியப்பாவிற்கு வெங்கடம்மா, சுப்பம்மா ஆகியோர் மனைவிகள். முதல் மனைவி பெயர் சுப்பம்மா.அவர் தற்பொழுது உயிருடன் இல்லை. சுப்பம்மாவிற்கு வெங்கடசேப்பா,,லட்சுமமம்மா ஆகியோர் வாரிசுகள். வெங்கடம்மாவும் இறந்து விட்டார். வெங்கடம்மாவிற்கு 6பேர் வாரிசுகள். அவர்கள் குஜ்ஜம்மா,ரத்தினம்மா,சாவித்ரியம்மா,பாப்பம்மா, சுப்பம்மா. குஜ்ஜம்மா இறந்துவிட்டார்.அவர் இறந்து 10வருடம்ஆகிறது. குஜ்ஜம்மமாவின் குழந்தைகள் பெயர் ' எனக்குத் தெரியாது. பாப்பையாவின் வாரிசுகள் தான் வாதிகள். முனியப்பா இறந்தது எனக்குத் தெரியும். முனியப்பா இறந்தவுடன் அவரது முதல் மனைவி மற்றும் இரண்டாவது மனைவியன் வாரிசுகள் முனியப்பாவின் சொத்துக்களை வாய் மொழியாக

பாகம்பிரித்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். வாய்மொழி பாகப்படி சுப்பம்மா வாரிசுகளும்,வெங்கடம்மாவின் வாரிசுகளும் தனி தனி சுவாதீனத்தில் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் தனி தனி சுவாதீனத்தில் உள்ளது வாதிகளுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.அதனால் தான்அவர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2002 முதல் அவர்கள் தனி தனி சுவாதீனத்தில் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அப்பா சொத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு பாகமாகிவிட்டால் பாகம் பெற்றவரின் குழந்தைகள் அவருக்கு கொடுத்த பாகத்தில்' தான் பாகம் கேட்க முடியும் என்று சொன்னால் சரிதான். 1 முதல் 11 பிரதிவாதிகள் 2016 ல் பாகப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். வெங்கடேசப்பாவின் மனைவி பெயர் சின்னம்மா. தற்பொழுது சாட்சிஅவர் பெயர் நாராணம்மா என்றும் அவரை சின்னம்மா என்றும் அழைப்பார்கள் என்றும் சொல்கிறார். வெங்கடேசப்பா அவரது மனைவி 12வது பிரதிவாதிக்கு சில சொத்துக்களைதானம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். 2வது பிரதிவாதி அவருக்கு பாகப்பிரிவினையில் கொடுத்த சொத்தை தான் 12வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 1வது பிரதிவாதிக்கு மற்றவர்களை விட மதிப்புஅதிகமாக உள்ள சொத்துபாகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்தை தான் 'பாகம் கொடுக்க முடியும்என்று சொன்னால் சரிதான். பஞ்சாயத்திற்கு நான் 'போகவில்லை. முதல் விசாரணை வாக் மூலம்வழக்கறிஞர் தயார் செய்தார்.நான் கையெழுத்துப்போட்டேன்.அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது.2ம் வாதி எனது மருமகன் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.